முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.05.2023, புதன்கிழமை

1. கருணை வடிவாக வந்தருளி
காக்கும் சக்தியே அரங்கா
ஆறுமுகனார் அவதார வடிவே
அண்ணலே உமை போற்றி
2. போற்றியே அறிவுரை ஆசி
புகலுவேன் சோபகிருது விடைதிங்கள்
ஆற்றல்பட சூலதிகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 03 ம் நாள், 17.05.2023, புதன்கிழமை)
அருளுவேன் கண்ணிச்சித்தர் யானும்
3. யானும் அரங்கன் வழிபலம்
உலகம் அடைய உரைப்பேன்
ஞானவான்கள் எனும் சக்தியை
நம்பிக்கைபட உருவாக்கி அருளும்
4. அருளும் அரங்கன் தயவை
அனைத்து மகாசக்திகளும் கண்டு
மிரளும் வண்ணம் செயல்பாடு
முன்னேறி மண்ணுலகம் அடைந்து வர
5. வருகவே உலகமாற்றத்துக்கு
வழிகாட்டலாக மிக்கபலமாக
ஆறுமுகனாரின் வழிபாட்டுடன்
அன்னதான சேவை நெறி நிற்க
6. நிற்கவே கலியுக மக்கள்
நேசமுடன் பிரணவக்குடிலை
ஏற்பு கொண்டுத் தொடர்ந்து
இணைந்து கலந்து சேவை
7. சேவைதனை உலகம் எங்கிலும்
செல்லும் வண்ணம் ஆற்ற
அவனியெங்கிலும் அரங்கனின்
ஆற்றல்மிக்க தொண்டர்படை பெருகி

8. பெருகியே குருவருள் ஆசியாக
பெருந்தயவு ஞானம் ஆகி
தருமத்தை விரிவாகச் செய்து
தணிகாசலப் பெருமானை காணும்

9. காணும் சக்திபலம் அடைந்து
கண்டுத் தேறி மேலும் உயர்ந்து
ஞானவான்கள் ஆக மாறி
ஞானதேசிகன் தேர்வு செய்த

10. செய்தநல் ஞானிகளே ஆவர்
சித்தசபை ஞானசபை எனும்
மெய்கண்ட மக்கள் படை
மேலவர்கள் கூடிய ஆளுமையாக

11. ஆகவே உலகம் அடைந்து
அமைந்திடும் ஞான ஆட்சி
மகான்களும் நிரம்பிய வண்ணம்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–